**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

அசல் வழக்கு எண். 228/2019

இன்று 2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 11ம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : சரோஜினி

தந்தை பெயர் : பொன்னுச்சாமி

வயது : 38

முதல் விசாரணை

வாதிகள் ஆஜர் இல்லை. பிரதிவாதி ஆஜர் இல்லை . வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நான் தாவா பிரதிவாதியின் மகள்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சியின் ஆதார் அட்டை ஒளி நகல் **சா.சா.ஆ.ஓய் 1** (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.